**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.252/2018</u>**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஜெ.நாகராஜன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலாமணி | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 28.02.2023

**P.W. : 2**

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் பெருமாள் ரெட்டியார் பிறகு ராமசாமி ரெட்டியார் அதன் பின்பு பாலாமணி ஆகிய எனக்கு பாத்தியப்பட்டதாகும். ராமசாமி ரெட்டியார் எப்போது இறந்தார் என்றால் 27.03.1984ம் தேதியாகும். ராமசாமி ரெட்டியார் கொடை ஆவணம் எந்த தேதி, எந்த மாதம், எந்த வருடம் எழுதி வைத்தார் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. இந்த வழக்கு என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அந்த நிலத்தை மீட்டு கொடுப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ராமசாமி ரெட்டியார் எழுதி வைத்த கொடை ஆவணத்தின் அசல் யார் கைவசம் உள்ளது என்றால் என் கைவசம் உள்ளது. தற்போதும் அந்த கொடை ஆவணத்தின் அசல் என் கைவசம் தான் உள்ளது. நானும் எனது கணவரும் எந்தவொரு

பிரச்சனையும் இல்லாமல் ஒன்றாகத்தான் கடைசி வரை வசித்து வந்தோமா என்றால் கடைசி வரை ஒன்றாகத்தான் வசித்து வந்தோம். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் எழுத படிக்க தெரியும். வழக்கின் 3ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்பவருடன் சேர்ந்து சென்று தான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பத்திரத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவும் இல்லை கையெழுத்தும் போடவும் இல்லை. 3ம் பிரதிவாதியான ஜெயக்குமார், கிருஷ்ணன் என்பவரோடு சேர்ந்து தான் என்னை ஏமாற்றிவிட்டார்கள் என்ற விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2016ல் தான் தெரிய வந்தது. 3ம் பிரதிவாதி ஜெயக்குமார் அவர் என்னை ஏமாற்றிவிட்டார் என்று அவர் மீது போலீசாரிடம் புகாரோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். போலீசாரிடம் கொடுத்ததாக சொல்லும் புகாரை இந்த வழக்கில் நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் சொல்லியுள்ள கிரையங்கள் அனைத்தும் எந்த வருடம் நடைபெற்றது என்றால் 2011-2016 காலக்கட்டங்களில் நடைபெற்றது. 2011-2016 காலக்கட்டத்தில் 3ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்னோடு தான் இருந்தாரா என்றால் என்னோடு தான் இருந்தார். அதன் பிறகு சென்னை சென்றுவிட்டார். தாவா சொத்தின் உள்ள பட்டா 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பெயரில் மாற்றப்பட்டுவிட்டதா என்றால் மாற்றப்படவில்லை. நான் ஏமாற்றப்பட்ட விவரம் தெரிந்தவுடனே 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கறிஞர் அறிவிப்பு செய்தேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு அந்த வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் செய்தேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. அந்த வழக்கறிஞர்

அறிவிப்பை என்னுடைய வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. 2016 ம் வருடம் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் தாவா சொத்தில் தான் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை குடியிருந்து வருகிறேன். சார்பதிவாளர் அலுவலரிடம் நான் ஏமாந்துவிட்டேன் என்று மனு செய்தேனா என்றால் அவ்வாறு நான் மனு எதுவும் செய்யவில்லை. 3 ம் பிரதிவாதி ஜெயக்குமார் தற்போது எங்குள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்தில் நான் இருந்து வருவதைக் காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் வழக்கில் காட்டுப்புத்துர் சார்பதிவாளர் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதாக கூறும் நிலையில் அவர் மீது ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இல்லை. குறிப்பிட்டு எந்த தேதி எந்த மாதம், எந்த வருடம் நான் ஏமாந்த விவரம் தெரிய வந்தது என்றால் 2017 ம் வருடம் மே மாதம் தேதி சரியாக தெரியவில்லை. நான் என்னுடைய வழக்கில் நான் ஏமாந்த தேதியை பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்து உள்ள கிராமம் என்பது பெரிய கிராமமா அல்லது சின்ன கிராமமா என்றால் சின்ன கிராமம் ஆகும். அந்த கிராமத்தில் உள்ளவர்களை விசாரித்தால் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் எத்தனை வருடம் விவசாயம் செய்து வருகிறார் என்பது தெரிய வரும் என்றால் அவர் விவசாயம் செய்யவில்லை. நான் தான் விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்திற்கான சிட்டா, அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது 1ம் பிரதிவாதியான கிருஷ்ணன் பெயரில் உள்ளது.

தற்போது தாவா சொத்தில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் சோளப்பயிர் பயிரிடப்பட்டுள்ளது. ராமசாமி ரெட்டியார் கொடை ஆவணம் எழுதும் சமயத்தில் நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. அந்த கொடை ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்பதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கொடை ஆவணம் எழுதுவதற்கு எந்த பத்திர விற்பனையாளரிடம் பத்திரம் வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான கிரைய தொகையை வாங்கி கொண்டு தாவா சொத்தை பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 கொடை ஆவணமானது என்னால் போலியாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.